விலை சதம் 25    Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16    The Eelanaadu    இதழ் 120

யாழ்ப்பாணம்    வைகாசி 30    ஐ. அல் 21    வியாழக்கிழமை    13-6-74

12 JUN 1974
UNDERGRADUATE LIBRARY

நவீன் கணிதம்
(தமிழில்)

குறைந்த செலவில், சிறந்த முறையில் தபால் மூலம் போதிக்கப்படும். 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கும் தேசிய கல்வித் தராதர வகுப்புகளிற்கும், ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய-மாணவருக்கும்

மொடேர்ண்
எடியுகேஷன் சென்ரர்
நெல்லியடி.
கரவெட்டி.

# செத்தல்மிளகாய் ரூ. 9 ரூபாவாக கொள்முதல்

## விற்பனை இலாகா ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா. சுத்தமான முதல்ரக செத்தல் மிளகாயை ரூத்தல் 9 ரூபா வீதம், வட பகுதியில் விற்பனை இலாகா கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்வனவு செய்து வருகின்றது. இரண்டாம் தர மிளகாயை 6 ரூபா வீதம் கொள்முதல் செய்கிறது.

யாழ். விற்பனை இலாகா உதவி ஆணையாளர் திரு. என்.சிவசிதம்பரம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

"செத்தல்மிளகாயை விற்பதற்கு ஆவலாக இருக்கும் விவசாயிகள், விற்பனை இலாகாக் கொள்வனவு நிலைய உத்தியோகத்தர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மிளகாயை மேற்கண்ட விலைகளுக்குக் கொடுக்கலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுன்னாகம், சாவகச்சேரி, கிளிநொச்சி, வவனியா, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள விற்பனைத் திணைக்களக் கொள்முதல் நிலையங்கள் மிளகாய் கொள்முதல் செய்கின்றன.

### வெளிச்சந்தையில் விலை வீழ்ச்சி

வெளிச்சந்தையில் செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. முதல் ரக மிளகாய் ரூத்தல் 8 ரூபாவரை கொள்வனவு செய்யப்படுவதாகவும், இரண்டாம் தர மிளகாய் ரூத்தல் 5 ரூபா வரை கொள்முதல் செய்யப்படுவதாகவும் வெளிமார்க்கட்டில் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் 10 முதல் 11 ரூபா வரை வட பகுதியில் கொள்முதல் செய்யப்பட்டதாகவும் இந்த விலைக்குக்கொள்வனவுசெய்து வைத்தவர்கள் கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதாயும்தெரிய வருகிறது.

மிளகாய விலையில் திடீர் வீழ்ச்சிஏற்பட்டதைத்தொடர்ந்து வடபகுதியில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மிளகாய் ஆய்வதை தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாக கிளிநொச்சித் தொகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார். விஸ்வமடு, முத்தையன்கட்டு, திருவையாறு, கல்மடு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் மிளகாய் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-அ)

## ஆபாச சுவரொட்டிகள் மீது தீவிர கண்காணிப்பு

சென்னை, ஜூன் 12

தமிழ்நாட்டில் ஆபாச சுவரொட்டிகளை ஒட்டுவோர் மீது தமிழ்நாடு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க உள்ளது.

ஆபாச சுவரொட்டிகளை ஒட்டுவோர் மீது கடுந்நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாருக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

பாலியல் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய- நமது பண்பாட்டுக்கு ஒவ்வாதவகையில் சுவரொட்டிகளை தயாரிப்போர், வெளியிடுவோர் ஒட்டுவோர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்று தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதி கூறினார்.

பத்திரிகைகளில் வெளியிடப்படும் படங்களின் தரம் பற்றி பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் அரசாங்க அதிகாரிகளும் விரைவில் ஆலோசனை நடத்த இருக்கின்றனர் என்றும் கலைஞர் கருணாநிதி கூறினார்.

## வைத்திலிங்கம் ஈராக் சென்றார்

ஆனைக்கோட்டை, புதன்

உலக சோசலிச இயக்க தேசிய விடுதலையின் இணைப்பு பற்றிய மகாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக வட பகுதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கிளையின் அமைப்பாளரும் தொழிற்சங்கத் தலைவருமான திரு. அ. வயித்திலிங்கம் ஈராக் தலைநகரான பக்தாக்திற்கு பயணமானார். இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராக மொஸ்கோவில் நடைபெறும் மகாநாட்டிலும் கலந்துகொண்டு நாடு திரும்புவார். (ஈ)

## புயலுக்கு 40 பேர் பலி

மணிலா, ஜூன் 12

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஒன்றான லூகோவில் இடம்பெற்ற பயங்கர புயற்காற்றுக்கு 40 பேருக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றும் நேற்று முன்தினமும் வீசிய புயற்காற்றினால் வீதிகளும் பாலங்களும் அடித்துச்செல்லப்பட்டுள்ளன என்றும் 25 பேர் வரை காணமற்போயுள்ளனர் என்றும் தேசியசெஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்தது.

புயற்காற்றினால் சுமார் 90 ஆயிரம் வீடுகள் நாசமடைந்துள்ளன என்றும் இதனால் ஏற்பட்ட சேதம் 7 லட்சத்து 20 ஆயிரம் டாலர்வரை இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம் இன்று பிலிப்பைன்சில் அதன் சுதந்திரதினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## 3½ புசல் நெல் கடத்திய வான் ரூ. 25 ஆயிரம் பிணையில்

மாவிட்டபுரம், புதன்

சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி அரிசி கொண்டு சென்றவரை 1000 ரூபா பிணையிலும், அந்த அரிசியை ஏற்றிச் சென்ற வானை 25 ஆயிரம் பிணையிலும் செல்ல அனுமதித்தார் மல்லாகம் நீதிபதி.

பலாலியைச் சேர்ந்த க. வேலுப்பிள்ளை என்பவர் சி. செல்லப்பா என்பவரது வானில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மூன்றரைப் புசல் அரிசியை கொண்டுசென்றதாக காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர், வி. செல்லையா, கான்ஸ்டபிள், எம். மாரூப் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு மேற்படி நபரும் லொறியும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டது.

அச்சமயம் நீதிபதி திரு. டி. வேசுரத்தினம் மேற்படி அரிசிச் சொந்தக்காரரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து சம்பந்தப்பட்ட வானை 25 ஆயிரம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். (ஈ)

## தொழிற்சங்கங்களுக்கு அரசு மதிப்பளிக்கிறது

உடுவில், புதன்

"ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்குவந்த பின்னர் தொழிற் சங்கங்களுக்கு உரிய மதிப்பும், கௌரவமும் அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக ஆசிரிய சங்கங்களைக்

[6-ம் பக்கம் பார்க்க]

## கோஷ்டிக் கலவரம்: 6 பேர் பிணையில் அனுமதி

மாவிட்டபுரம், புதன்

மயிலிட்டி வடக்கில் இடம் பெற்ற கோஷ்டிக் கலவரம் தொடர்பாக கைதான சரணடைந்த 6 நபர்களை தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார் மல்லாகம் நீதிபதி.

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மயிலிட்டி வடக்கில் நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு இணைத்து உபயோகிக்கும் 'ஹோஸ் பைப்' ஒன்று களவு போனதின் எதிரொலியாக கோஷ்டிக் கலவரம் ஒன்று எழுந்து, அதில் க. தேவராசா என்பவர் பலத்த காயமடைந்தார். மேலும் க. சிவபாதம், க. இலங்கநாதன், க. இலட்சுமி (பெண்), ஐ. கந்தையா, சி. இளையதம்பி, வ. நடராசா ஆகியோரும் காயமடைந்தனர்.

இவர்களில் க. தேவராசா, க. சிவபாதம், ஐ. கந்தையா, சி. இளையதம்பி ஆகியோர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்றவர்கள் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள்.

இச்சம்பவம் குறித்து விசாரணையில் ஈடுபட்ட காங்கேசன்துறைப் பொலிஸ்

(2-ம் பக்கம் பார்க்க)

## இம்மாதம் 16-ந் திகதி வடபகுதி சுதந்திரக்கட்சி கருத்தரங்கு, பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கருத்தரங்கு யாழ். நகரமண்டபத்தில் இம்மாதம் 16-ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் சுதந்திரக் கட்சி வாலிபமுன்னணி பிரதம அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா உரையாற்றுவார்.

பிலியந்த எம். பி. திரு. மஹிந்த ராஜபக்ஷ, யப்பகுவ எம். பி. திரு. திஸ்ஸ பலல்ல ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வகர்கள்.

அமைப்பாளர் தலைமையில் வடபகுதியிலுள்ள ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து 25 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

கருத்தரங்கைத் தொடர்ந்து மாலை 6 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெறும் ...... (க)

## சுதுமலை கொலை வழக்கில் எதிரி விடுதலை!

யாழ்ப்பாணம், வியாழன்

சுதுமலை கொலை வழக்கில், விசாரணையின்பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

சுதுமலையில் 72-ம் ஆண்டு ஜூலை 18-ம் திகதி, முருகேசு குலரத்தினம் என்பவரைக் கொலை செய்ததாக, வேலன் சின்னத்துரை என்பவர்மீது குற்றம்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரி சார்பில், சட்டத்தரணி கே. வி. எம். சண்முகநாதன், சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசாங்கத் தரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார். (க-அ)

## நினைவுச் சின்னம்!

சென்னை, ஜூன். 12

காலஞ்சென்ற திராவிடக் கழகத்தலைவர் பெரியார் ஈ. வெ. ராவுக்கு நினைவுச்சின்னம் எழுப்பப்படவுள்ளது. எழும்பூரில் அவர் பூதவுடல் அடக்கம்செய்யப்பட்ட இடத்தில் திராவிடக் கழகம் பெரியாரின் நினைவுச்சின்னத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.

இந்த இடத்தில் பொதுநூல் நிலையமொன்றையும் நிறுவி பெரியார் எழுதிய நூல்களையும். பெரியார் பாவித்த பொருட்களையும் இங்கு வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எங்களிடம் எல்லாவிதமான ஏக்கறிவிதைகள், உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரீ. சண்முகநாதன் அன் கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: No. 7134. 238

எங்களிடம் எல்லா அளவு கலைக்கொண்ட பொலிதீன் ரோல்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம். "முர்தஸா டிஸ்றிபியூட்டர்ஸ்:- (முஹம்மது அலி அப்துல் அலி அருகாமையில்), 5, பெரியகடை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 515 258

டீசல் லைட்மெசின் 1500 வாட்ஸ். விற்பனைக்கு உண்டு நேரில் வரவும். இல: 65, ஜின்னாரோட், யாழ்ப்பாணம். 255

## தேவை

லேத்மன் (Latheman) ஒருவரும் உதவியாளர்களும் தேவை. நேரில்வரவும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 254

யாழ்ப்பாணத்தில் ஒரு தொழில் ஸ்தாபனத்திற்கு பங்குதாரர் தேவை. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். கற்பகத்தரு, 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 203

## ஏழாலைக் கிராம சபை சோலைவரி பற்றிய முக்கிய அறிவித்தல்

ஏழாலைக் கிராமசபையின் சகல வரியிறுப்பாளர்களும் தத்தம் ஆதனங்களின் பேரில் செலுத்த வேண்டியுள்ள 1974-ம் ஆண்டு 2-ம் காந்தாயம் வரையிலான சோலைவரி நிலுவைகள் அனைத்தையும் எதிர்வரும் 30-6-74-ம் திகதிக்கு முன்னர் இப்பணிமனையில் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். தவறின் கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 257 37 5ம் பிரிவின் கீழ் நடுக்கட்டல் மூலம் குறிப்பிட்ட காணியின் அசைவுள்ள ஆதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதையும் அசைவற்ற ஆதனங்கள் வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் என்பதையும் மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நடுக்கட்டலுக்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளனைத்தும் முடிவடைந்த நிலையில் உள்ளதால் வரியிறுப்பாளர்கள் அனைவரும் தங்கள் நிலுவைகள் அனைத்தையும் செலுத்தி எமக்கு ஒத்துழைப்பை நல்குவதுடன் மனவருத்தத்துக்குரிய நடவடிக்கைகளிலிருந்து தங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மட்டுமே பணிமனையில் பணம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற்கு கொள்ளவும். மேற்படி தினங்கள் அரசாங்க விடுமுறை நாட்களாக வரும் பட்சத்தில் அவற்றை அடுத்து வரும் அலுவலக நாளில் பணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

சி. குலசபாநாதன்,
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்
கிராமாட்சி மன்றம்,
ஏழாலை.

கிராமாட்சிமன்றப் பணிமனை, ஏழாலை,
974-06-06. 81

## வாடகைக்கு

சோமசுந்தரம் அவன்யூவில் நவீன வசதிகளுடன் நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 229½, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7083. 262

## நெல்லியடிப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

கீழ்க்காட்டிய வேலைகளுக்கு "சீல்" வைத்த கேள்விகள் 27-6-74 ந. ப. 12 00 மணி வரை ஏற்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் உரிய பத்திரங்கள் 25-6-74 பி. ப. 3-00 மணிவரை இச்சபையில், கேள்விப் பத்திரப் பிணை ரூ. 100/-ம், பத்திரக் கிரயம் ரூ. 5/-ம் கட்டிய, மின்சார வேலையில் அனுபவமுடையவர்களுக்கு வழங்கப்படும். மேலதிக விபரம் இக்கந்தோரில் அறியலாம்.

1. நாலாம் வட்டார அம்மன் கோவில் மின்விஸ்தரிப்பு 2800 அடி நீளம் அலுமினியம் வயரும், ஏனைய சகல பொருட்களும், கூலியும் கொடுத்து கற்பனைப்படி செய்து முடித்தல்.
2. வலுவூட்டிய தேக்குமர மின்சார கம்பங்களை நெல்லியடிப் பட்டின சபை எல்லையுள் தலைவர் கற்பிக்கும் இடங்களில் கொடுத்தல். உயரம்-30 அடி, 27 அடி, 25 அடி. உடையனவாகவிருத்தல் வேண்டும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலை குறிப்பிடப்படவேண்டும்.

ச. வ. தேவசகாயம்.
தலைவர்
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி,
கரவெட்டி,
11-6-74. 85

## உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த ஆனி உத்தர உற்சவம் இம்மாதம் 16-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26-ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவத்துடனும் பூர்த்தியாகவுள்ளன.

0 0 0

ஊர்காவற்றுறை, புதன் புளியங்கூடல் மகாமாரியம்மன் கோவில் ரதோற்சவம் இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வியாழன் புங்குடுதீவு புனித அந்தோனியார் கோவிலில் அந்தோனியார் திருநாளை முன்னிட்டு இன்று பிற்பகல் விசேஷ பூசைப்பலியும் ஆராதனையும் நடைபெறும். (அ)

......

## யந்திரம் திருட்டு

மீசாலை, புதன்

கொடிகாமம் பெற்றோல் நிலையத்தில் சுமார் 2000 ரூபா பெறுமதியான காற்றடிக்கும் யந்திரம் ஒரு திருடப்பட்டுள்ளது.

இப் பெற்றோல் நிலைய உரிமையாளர் பொலிஸில் செய்துள்ள புகாரைத் தொடர்ந்து விசாரணை நடை பெற்று வருகிறது.

செ. மகேசன்,
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

## 1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாக சட்டம் 283-ம் இலக்கப் பிரிவின் பிரகாரம் மரணசாதனத்தை நிருபணம் செய்வதும், மரணசாதன நிர்வாகப்பத்திரம் வழங்குவதற்குமான

# இடைக் காலக் கட்டளை

## இலங்கைக் குடியரசின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

காலஞ்சென்று போன காரைநகர் விளானை கணபதிப்பிள்ளை முருகரின் மரணசாதனம் சம்பந்தமான விஷயத்தில்

வலயம்: யாழ்ப்பாணம்
இல. T. 2986

காலஞ்சென்றவர்
காரைநகர் களபூமி விளானை முருகர் சுப்பிரமணியம்
மனுதாரர்

எதிராக

காரைநகர் களபூமி விளானை

1. முருகர் காசிப்பிள்ளை
2. கந்தப்பு சங்கரப்பிள்ளையும் பெண்
3. சிதம்பரமும்
4. அருணாசலம் கைம்பெண் சின்னம்மா
5. ஆறுமுகம் சுப்பிரமணியமும் பெண்
6. தங்கம்மாவும்

எதிர் மனுதாரர்கள்

இலங்கைக் குடியரசின் மேலதிக நம்பிக்கைப் பொறுப்பாளராகிய M. A. எல்லைப்போல ஆகிய நான் 24-8-73 திகதியிட்ட மேற்படி விண்ணப்பதாரரின் மனுவில் கண்டிருக்கும்விஷயங்கள் பார்த்த மாத்திரத்திலே நிரூபிக்கப்பட்டிருக்கின்றனவென்று திருப்தியடைந்து பின்வருமாறு கட்டளையிடுகிறேன்.

இந்த இடைக்காலக் கட்டளை கிடைக்கும் எவராவது அல்லது மேற்படி மரணசாதனம் சம்பந்தப்பட்ட சொத்துக்களில் அக்கறை கொண்ட எவராவது 1974 ம் ஆண்டு ஆனி மாதம் 27-ந் திகதிக்கு முன்னதாக எதிர்க்காரணம் காட்டினாலன்றி,

25-11-1965ல் பிரசித்த நொத்தாரிஸ் செ. மகேசன் அவர்களால் 357-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, தற்போது இந்த ஆபீஸில் பத்திரப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டு இருப்பதுமான மரணசாதனத்தின் நிறைவேற்றுபவராகக் காட்டப்பட்டிருப்பவர் மேற்படி மனுதாரரேயென்றும், குறித்த மரணசாதனத்தின் மீதான நிர்வாகப்பத்திரம் மனுதாரருக்கே முறைமையாக வழங்கப்படவேண்டியதென்றும், இத்தால் உத்தாவிடுகிறேன்.

1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ந் திகதி.

ஒப்பம்
சோ. இராசநாதன்,
பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்காக. 83

படிவம் இலக்கம் 4 (அ)

## 1973ம்ஆண்டில் 44ம் இலக்க நீதி நிருவாக சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குவதற்கான

# இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

மந்திகை பருத்தித்துறை காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தணிகாசலத்தின்மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தங்கள் சம்பந்தமான விஷயத்தில்

மந்திகை, பருத்தித்துறை, கந்தையா கணபதிப்பிள்ளை கைம்பெண் தங்கம்மா.

விண்ணப்பகாரர்

வலயம்: யாழ்ப்பாணம்
இலக்கம் 4/ரி

அத்துடன்

1. வதிரி தணிகாசலம் கைம்பெண் சரஸ்வதி.
2. மந்திகை, பருத்தித்துறை, தணிகாசலம் மகள் சிறீராணி.
3. மந்திகை, பருத்தித்துறை, தணிகாசலம் மகள் வனிதா.
4. மந்திகை, பருத்தித்துறை, தணிகாசலம் மகள் இந்திரா.
5. வதிரி, கரவெட்டி, கணபதிப்பிள்ளை பரஞ்சோதி.

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின்கீழ் 1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 14-ம் திகதி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள முக்கிய உறுதிக்கூற்றுகள் முதல் தோற்றத்தில் நிருபிக்கப்பட்டுள்ளன எனத் திருப்திப்பட்டதின்பேரில் மேலதிக நம்பிக்கைப் பொறுப்பாளராகிய எம். ஏ. எல்லேபொல ஆகிய நான் இந்தக் கட்டளையைத் தாக்கல் செய்யப்பெறுகின்ற எந்த ஒரு நபராவது அல்லது, வேறு எந்த நபராவது 1974-ம் ஆண்டு ஆடி மாதம் 2-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் ஆட்சேபம் தெரிவிப்பதற்கான காரணம் காட்டினாலன்றி

(அ) மேற்சொல்லப்பட்ட விண்ணப்பக்காரர் சொல்லப்பட்ட காலஞ்சென்ற தாயார் என்றவகையில் காலஞ்சென்றவரில் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத்தத்துவப்பத்திரங்களைப் பெறுவதற்கு உரிமை உடையவர் எனவும், அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

(ஆ) மேற்சொல்லப்பட்ட 5-வது எதிர்மனுதாரரான கணபதிப்பிள்ளை பரஞ்சோதி அவர்களை மேற்சொல்லப்பட்ட 2-ம், 3-ம், 4-ம் பராயமற்ற எதிர்மனுதாரர்களின் பாதுகாவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் இத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது.

ஒப்பம்:
எஸ். இராஜநாதன்
புறபேற் அலுவலகம்
பொதுநம்பிக்கைப் பொறுப்பாளருக்காக

1974 வைகாசி 30-ம் திகதி
புறபேற் காரியாலயம்
யாழ்ப்பாணம்.
78

## கேள்வி அறிவித்தல்

1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ந் திகதி (24-6-74) காலை 10-00 மணி வரை இப்பட்டின சபையில் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ம் கேள்விப் படிவ விலை 2/50-ம் செலுத்தியோருக்கு இவ்வலுவலகத்திலிருந்து 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி பிற்பகல் 2-30 மணிவரை விநியோகிக்கப்படும்.

இவ் வேலைகள் அரசாங்க நன்கொடைப் பணத்திலிருந்து செய்யப்படவிருக்கும் வேலைகளாகும்.

மேலும் விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து அறிந்து கொள்ளலாம்.

### வேலைகள்

1. சங்கானை 7-ம் வட்டாரம் கப்பண்டாவயிரவர் வீதி திருத்தவேலை.
2. சங்கானை ஓடக்கரை வீதிப் பக்கக் கான் கட்டும் வேலை.
3. சங்கானை விளாவெளிச் சுடலை அபிவிருத்தி வேலை.

சி, வயிரமுத்து
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபை சங்கானை.
1974-6-10. 86

## இன்று

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை கிராமசபையின் பகுதிகளுக்கு மின் வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை கொல்லங்கலட்டியில் அமைத்துள்ள இலங்கை மின்சாரசபையின் உபமின் நிலைய திறப்புவிழா இன்று நடைபெற இருக்கிறது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. நல்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் இலங்கை மின்சாரசபை பொறியியலாளர் திரு. கே. பாலச்சந்திரன் மேற்படி நிலையத்தை திறந்துவைப்பார். (ஈ)

ஃ ஃ ஃ

மாவிட்டபுரம், புதன்

மாவை-கொல்லங்கட்டி சனசமூக நிலைய வெள்ளி விழாவும், சிறுவர் பாடசாலை பரிசளிப்பு விழாவும் இன்று நடைபெறவுள்ளது. (ஈ)

## கோஷ்டிக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் கே. ஆர். இராமச்சந்திரன், கான்ஸ்டபிள் ஆனந்தராசா ஆகியோர் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சி. செல்லையா என்பவரை சந்தேகத்தில் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் நீதிபதி 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசார் மேலும் பலரைத் தேடி வந்தனர். இதையடுத்து சி. நடராசா, சி. கணபதிப்பிள்ளை, சி. சின்னத்துரை, வ. நல்லதம்பி, ச. வைரமுத்து ஆகியோர் காங்கேசன்துறைப் பொலிசில் சரணடைந்தனர்.

இவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு. .. யேசுரத்தினம் வழக்கு விசாரணையை இம்மாதம் 17-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஈ)

## பரீட்சைரத்து

பிரான்ஸ் நடத்தவிருந்த அணுஆயுதபரீட்சை பொருளாதாரம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை மாய்க்க முனைந்த நான்கு சகோதரிகள்

கண்டி, புதன்

கண்டி ஏரிக்குள் குதித்து உயிரை மாய்க்க முனைந்த நான்கு தமிழ் சகோதரிகள் அங்கு நின்றவர்களாலும் பொலிஸாராலும் காப்பாற்றப்பட்டார்கள்.

நேற்று முன்தினம் மாலை 2-30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

தலகம என்ற தோட்டத்தைச் சேர்ந்த இந்தப்பெண்களுக்கு பெற்றோர்கள் இல்லையென்று அவர்கள் மீது அக்கறை எடுப்பதற்கு யாருமில்லாததாலேயே மனமுடைந்து இவர்கள் இந்த முடிவுக்குவந்ததாகத் தெரியவருகிறது.

இரண்டு பெண்கள் சாறி அணிந்திருந்தனர். மற்ற இருவரும் சட்டை போட்டிருந்தார்கள். நகையும் அணிந்திருந்தார்கள்.

கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 14 நன்னீர்க் குளங்களில் மீன் வளர்க்கத் திட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்டத்திலுள்ள நன்னீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்புத் திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது. கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த மீன்வளர்ப்புப் பகுதியினர் சுமார் 14 குளங்களில் சிறந்தஇன மீன் குஞ்சுகளை இம்மாதம் 18ந் திகதி விடுவதன்மூலம் இது ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் செல்வி சத்தியபாம இராமநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அடுத்தவருடம் முதல் கருவாட்டு இறக்குமதியைப் படிப்படியாகக் குறைத்து உள்ளூரிலேயே கருவாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டிருப்பதால் யாழ்ப்பாணத்தில் இத் திட்டத்தை இன்று தொட்டே அறிமுகப்படுத்தினால் இதன் மூலம் மாவட்டத்தில் அதிக பயனை அடையவாய்ப்பேற்படுவதுடன் நாட்டின் அந்நியச்செலாவணியையும் ஏராளமாகச் சம்பாதிக்கலாம் என்று செல்வி இராமநாதன் கருத்துத் தெரிவித்தார்.

இரணைமடுக்குளம், வவுனிக்குளம், அக்கராயன்குளம், கரியாலை நாகபடுவான்குளம், தென்னியன்குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டினகுளம், முறிகண்டிக்குளம், சேமமடுகுளம், வன்னேரிக்குளம், விசுவமடுக்குளம், கனகராயன்குளம், தொண்டமான்குளம் ஆகிய 14 குளங்களிலேயே இத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இப்பதினான்கு குளங்களினதும் மொத்த மேற்பரப்பு சுமார் 17290 ஏக்கராகும்.

கடந்தவருடம் இக் குளங்களில் மொத்தமாகச் சுமார் 5300 பொதுக்கார்பு எனப்படும் மீன் குஞ்சு இனமும், திலப்பியா எனப்படும் ஜப்பான் மீன் இனக்குஞ்சுகள் 1900ம் இக் குளங்களில் இருகுளங்களில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

அடுத்த மாதத்தின் இவ் வருடத்திற்கான கணக்கெடுப்புக்களை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் செல்வி இராமநாதன் தெரிவித்தார். (த-ச)

## "தொழிலாளி ஒருவரை நியமிக்கவும்"

வண்ணார்பண்ணை, புதன்

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் வருடம் ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பயன்படாமல் இருந்து வருவதாகவும், இவ்வித்தியாலயக்கட்டிடங்களும், காணியும் பாதுகாப்பற்ற முறையில் இருப்பதால் காவலாளியே கடமையாற்ற முடியாத நிலை இருப்பதாகவும் அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். மாவட்டக் கிளைச் செயலாளர், வடமாநிலக் கல்வி அதிபதிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வித்தியாலயக்காவலாளியின் முறையீடுகள் சம்பந்தமாக மேற்படி கல்லூரி அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்திய சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆறுமுகம், தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இவ் வித்தியாலயத்தின் வருவாயை நல்லமுறையில் பயன்படுத்தினால் வித்தியாலயக் காணியையும், கட்டிடங்களையும் பாதுகாக்க முடியும் என்றும் இதற்கு பகல்நேர தொழிலாளி ஒருவரை நியமிப்பது பொருத்தமாக இருக்குமென்றும், இங்கு கடமையாற்றும் காவலாளிக்கு டோர்ச்லைட், விளக்கு போன்ற வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இவ்வித்தியாலயத்தில் நடந்த களவுகள் சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

## தையல் மெஷின்கள் வழங்கப்பட்டன

வண்ணார்பண்ணை, புதன்

புனர்வாழ்வு நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் உள்ள மூன்று பெண்களுக்கு 1200 ரூபாய் பெறுமதியான மூன்று தையல் யந்திரங்கள் யாழ். மாவட்ட சமூக சேவைப்பகுதியினரால் சென்றமாதம் கொடுக்கப்பட்டுள்ளன. ஒட்டுமடம், கந்தர்மடம், கண்டிக்குளி ஆகிய இடங்களைச் சேர்ந்த பெண்கள் இவற்றைப் பெற்றுள்ளனர்.

சமூக சேவைப்பகுதி உதவி அத்தியட்சகர்கள் திரு. ஏ. சி. நடராசா, எஸ். கெங்காதரன் ஆகியோர் இதைக் கையளித்தனர். கிராமசேவையாளர் திரு. ரி. சிவபாதசுந்தரம் இவர்களின் நலனைக் கவனித்தார். (அ)

## முள்ளியவளை சைவஇளைஞர் மன்றம்

முள்ளியவளை, புதன்

முள்ளியவளை சைவஇளைஞர்மன்றம் தண்ணீரூற்று அரவிந்த வித்தியாபீடத்தில் திருஞானசம்பந்தர் குருபூசையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினது. விழாவிற்குத்தலைமை வகித்த திரு. சோ. நடராசன் வன்னிநாட்டில் பண்டைக் காலத்திலே தமிழருடைய நாகரீகம் மகோன்னதமான நிலையில் இருந்ததென்றும் குளந்தொட்டு வளம்பெருக்கி கோயிலமைத்து சைவத்தையும் தமிழையும் வளர்க்க அடங்காப்பற்று வன்னிமன்னர்கள் தமது நாகரீகச் சிறப்பால் ஆத்மீகச் சக்தியினால் இந்நாட்டின் சுதந்திரத்தை 1803வரை காப்பாற்றினர். என்றும் இப்போது இலங்கையின் புனருத்தாரண வேளையில் வன்னிநாடு மறுபடியும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து நாட்டின் சுதந்திரத்தை மறுபடியும் காப்பாற்ற வேண்டும் என்றும் கூறினார்.

## துருப்பு வாபஸ் பிரேரணை தோல்வி

வாஷிங்டன், ஜூன் 11

வெளிநாடுகளில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் குறைக்கப்பட வேண்டும் என்று செனட் சபையில் கொண்டு வரப்பட்ட திருத்தப் பிரேரணை 54: 35 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

18 மாதங்களுக்குள் வெளிநாடுகளிலிருந்து 125,000 துருப்புக்கள் வாபஸ் செய்யப்பட வேண்டுமென்று ஜனநாயகக் கட்சித் தலைவர் மைக் மன்ஸ்பீல்ட் கோரியிருந்தார்.

அமெரிக்கப்படை வீரர்களில் சுமார் காலவாசிப் பேர் அந்நிய மண்ணில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 100,000 பேர் ஆசியாவிலும், 300,000 பேர் ஐரோப்பாவிலும் உள்ளனர் என்று அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அண்மைக்காலத்தில் வெளிநாடுகளில் அமெரிக்க ராணுவ பிரசன்னம் வெகு அதிகம் பெறுகிவிட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்கள். (ச)

......

## நிராகரித்தது

லண்டன், ஜூன் 12

பிரபுக்கள் சபையை ஒழிப்பது உட்பட வேறுசில புதிய முறைகளை உள்ளடக்கிய பிரேரணையொன்றை பிரிட்டிஷ் ஆட்சிமன்றம் நேற்று நிராகரித்தது.

## சிறந்த சமூக சேவையாளன்



சிறந்த சமூக சேவையாளரான அமரர் ப. தில்லையம்பலத்தின் ஆண்டுத்திதி இன்று நீர்வேலியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

மலாயா பென்ஷனரான திரு. தில்லையம்பலம் நாடு திரும்பியதும் கூட்டுறவுத் துறையில் பங்கு கொண்டு ஒரு பண்டசாலையை நிறுவி அவன் தனதிகாரியாகப், பல வருடங்கள் கடமையாற்றி அதனால் வரும் லாபத்தைக் கொண்டு நிலையான கட்டடமொன்று அமைக்கப்பாடுபட்டார். பலவருடங்களாக வலி - கிழ - ஐ-பண்டகசாலைச் சமாசத்தின் முகாமையாளராய் அமர்ந்து நேர்மையாய்க் கடமை புரிந்தவர் இவர் நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் பரிபாலகராய் பலகாலம் கடமையாற்றித் திருப்பணி வேலைகளுக்குஉவினார்

வலிகிழக்கில் பல சமய, சமூக ஸ்தாபனங்களின் வளர்ச்சியில் தீவிரமாக பங்கு கொண்டு திரு. தில்லையம்பலம் உழைத்தார். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம். (ச)

......

## ஒட்டுசுட்டானில் வங்கிக் கிளை

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலய ஆசிரிய விடுதி மனைகளில், ஒன்றில் இலங்கை வங்கியும், இன்னொன்றில் விவசாய விஸ்தரிப்புக் கந்தோரும் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன.

காணி, விவசாய அமைச்சர் திரு ஹெக்டர்கொப்பேகடுவா இவற்றைத் திறந்து வைப்பார். (ச)

# உலக உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பம்

பொன், ஜூன் 12

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் உலக உதைபந்தாட்டப் போட்டி இம்முறை மேற்கு ஜேர்மன் மூனிச்சில் இன்று ஆரம்பமாகின்றது.

இப்போட்டியை, மூன்று உலக உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து, தன் நாட்டுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்த 33 வயதான பிரேஸில் நாட்டு வீரர் பேலே ஆரம்பித்துவைப்பார். அப்போது இவருக்கு 'உலக உதைபந்தாட்ட அரசன்' என்ற சிறப்புப் பெயர் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

உலக உதைபந்தாட்டக் கிண்ணம் தற்போது பிரேஸில் நாட்டிடமே இருக்கின்றது. இக்கிண்ணத்தை பிரேஸில் நாடு மூன்று தடவைகள் (1958; 1962; 1970) பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் இறுதி ஆட்டம் அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறும்.

# 3 மாதங்களில் 4,400 பேர் டிக்கட் இன்றிப் பயணம்

கொழும்பு, புதன்

இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் மட்டும் 4,400 பிரயாணிகள் டிக்கட் இன்றி ரயில்களில் பிரயாணம் செய்துள்ளனர் என்று ரயில்வே திணைக்கள புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இக்காலகட்டத்தில் டிக்கட் இன்றி பிரயாணம் செய்தவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து 61 ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டது.

இம்மாதம் 6-ம் திகதி பம்பலப்பிட்டியில் 62 பேரும் களுத்துறையில் 92 பேரும் டிக்கட் இன்றிப் பிரயாணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு முறையே 600, 1200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

டிக்கட் இன்றிப்பிரயாணம் செய்டவர்களைக் கண்டுபிடிப்பதில் ரயில்வே திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

## நோய் பரவாமல் தடுக்கப்பட்டது

உடுப்பிட்டி, புதன்

சமீபத்தில் புலோலி தெற்குச் சாரையடி என்னுமிடத்தில் 'பல்சிபாரம்' என்னும் கொடிய மலேரியாசுரம் பரவியதைப் பருத்தித்துறைச் சுகாதாரப்பகுதியினர் துரிதமாகத் தடுத்துள்ளனர். கெப்பிற்றிகோலாவ என்னுமிடத்திலிருந்து புலோலி தெற்கிற்குவந்த ஒரு நோயாளியே இந்நோய் பரவக் காரணமாக இருந்தாரென்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு-கிழக்குப்பகுதியில் குடத்தனை, வலிக்கண்டி ஆகிய கிராமங்களில் சிலர் திடீரென மலேரியா நோயினால் கடந்த மாதம் பீடிக்கப்பட்டதாகவும் தடுப்பு நடவடிக்கைகள் அவசரம் அவசரமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மலேரியா பரவும் அபாயம் தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ...... (ச)

## 'இளைஞர்க்கு வழி காட்டுக'

சுழிபுரம், புதன்

"இளைஞர்களுக்குச் சங்கங்கள் வழிகாட்ட வேண்டும். இந்த நாட்டின் பொருள் வளத்தை வளர்க்கும் பணிகளில் ஈடுபட வேண்டும். ஐக்கிய இயக்கத்தின்நோக்கை இளையோர் உள்ளங்களில் நன்கு பதியச் செய்ய வேண்டும். அப்போதுதான் ஐக்கிய சங்கங்கள் நன்கு வலுப் பெறும்" என்று தொல்புரம், மூளாய் ஐக்கியநாணயசங்கங்களின் மேற்பார்வைச்சபை கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வடபகுதிக் கூட்டுறவு இலாகா தலைமைப் பரிசோதகர் திரு. எஸ். சந்திரசேகரம் குறிப்பிட்டார். சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கத்திற்கு சங்கத்தலைவர் திரு. மு. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார். 'நாணயசங்கமும் கிராம அபிவிருத்தியும்' என்னும் விடயம்பற்றி திரு. பொ. செல்வரத்தினம் சொற்பொழிவாற்றினார். (அ)

......

## என்றியரசர் கல்லூரியின் திறமை

இளவாலை, புதன்

வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் வட்டார ரீதியாக நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் இளவாலை புனித என்றியரசர் கல்லூரியிலிருந்து அநேகமான மாணவர்கள் காங்கேசன்துறை வட்டாரப் பிரிவில் தெரிவாகியுள்ளனர். இவர்களனைவரும் மாவட்ட ரீதியான போட்டியில் பங்குபற்றுவார்கள்.

காங்கேசன்துறை வட்டாரப் போட்டி அளவெட்டி மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றது.

......

## உபசரணை விழா

யாழ்ப்பாணம், வியா.

கொட்டடி ஸ்ரீபாலஞான வைரவர் கோவில் தொண்டர்கள் மேற்படி ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ வை நித்தியானந்த சர்மாவுக்கு நாளை வெள்ளியன்று உபசார விழா எடுக்கின்றனர். திரு. வே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், செஞ்சொற் சைவமணி செல்வி நல்லபிள்ளை நாகமுத்து திரு. வே. நாகராசா ஆகியோர் பாராட்டுரைவழங்குவர். தமிழ்மணி கணேசசுந்தரனின் கதாப்பிரசங்கம் மற்றும் மேளக்கச்சேரி, பண்ணிசை, வில்லிசை முதலிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும். (அ)

......

## சாயிபாபா பஜனை

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த ஞாயிறு பகவான் ஸ்ரீசத்தியசாயிபாவின் அகண்ட நாமபஜனை மருதமடைடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் யாழ்சாயி மகளிர் சேவா சமித்தினரால் நடாத்தப்பட்டது அன்று காலை 4 மணியளவில் சுப்பிரவாதத்துடன் ஆரம்பமாகிய பஜனை மாலை 7.30 மணியளவில் முடிவுற்றது. இப் பஜனையில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பக்தர்கள் சமூகமளித்திருந்தனர். இன மத. மொழி பேதமின்றி இந்த பஜனை நடாத்தப்பட்டது.

ஒவ்வொரு பஜனைக்கோஷ்டியினருக்கும் ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவ்வக்கோஷ்டியினர் அதிக உற்சாகத்துடன் பங்கு பற்றினர்.

அன்றைய தினம் யாழ் சாயி மகளிர் சமித்தினால் மாகேஸ்வரபூஜையும்நடாத்தப்பட்டது. செக்கிரட்டரி ஸ்ரீஜயதேவி பொன்னுத்துரை நன்றியுரையுடன் பஜனைமுடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆட்டமா இன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம், வியா.

இதுவரை வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்டுவந்த ஆட்டமா இனிமேல் வியாழக்கிழமைபிற்பகல் 2 மணிதொடக்கம்வழங்கப்படவுள்ளதாக யாழ். விற்பனைத்திணைக்கள உதவி ஆணையாளர் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கண்டிக்குளி விற்பனவு திணைக்கள டிப்போக்களில் மட்டுமே ஆட்டாமா இவ்வாறு வழங்கப்படும். (ஈ)

## அமெரிக்காவுக்கு இலங்கை பீங்கான்

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்துபீங்கான் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

9 லட்சம் ரூபா பெறுமதியான பீங்கான்கள் அடுத்த மாத முற்பகுதியில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் நியூசிலாந்து, பாங்கொக் ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கை பீங்கானுக்கு 'ஆடர்'கிடைத்துள்ளது. (ச)

## ''இருவகையிலும் துன்பமுண்டு

அரியாலை, புதன்

''நல்ல நோக்கு ஒரு பொழுதும்பிழைபோகாது. பொருள் தேடலாம். ஆனால் அப்பொருளைக் கொடுப்பதில் தான் இன்பம் உண்டு. செல்வம் குறைந்தாலும் துன்பமுண்டு. பொங்கிப் பெருகிக் கூடினாலும் துன்பமுண்டு''

இவ்வாறு அரியாலை சனசமூகநிலைய அன்னலட்சுமி காசிப்பிள்ளை ஞாபகார்த்த வெள்ளிவிழா நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சட்டத்தரணி எம். க. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

அமரர் நவரத்தினம் குமாரகுலசிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தைதிறந்து வைத்த சென் ஜோன்ஸ் கல்லூரி உதவி அதிபர் திரு. ஜே. ரி. செல்லையா பேசுகையில் ''இருபத்தைந்து ஆண்டுகள் குமாரகுலசிங்கம் வாழ்ந்து மக்கள் சேவையே மகேசன் சேவையாகக்கருதி தொண்டாற்றினார்'' என்றார்.

இரவு நடைபெற்ற வெள்ளிவிழா மலர் வெளியீட்டுவைபவத்தில் மலர் விற்பனையை ஆரம்பித்து வைத்த யாழ். உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரத்தினம்சனசமூக நிலையத்தின் சேவையைப்பாராட்டிப் பேசினார்.

மற்றும் பலரும் பேசினர் அரியாலை திருமகள் நாடக மன்றத்தின் 'பாஞ்சாலி சபதம்' நாடகமும் விழாவில் இடம்பெற்றது. (ச)

## அ. லி. சே. ச. பொதுச்சபைப் பிரதிநிதிகள்

வண்ணார்பண்ணை, புதன்

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் பொதுச்சபைக்கு இச்சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையிலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி இலாகாவைச் சேர்ந்த திரு. வி. பொன்னம்பலம், சுங்கப்பகுதியைச் சேர்ந்த திரு. எஸ் குமாரசாமி, தொழிற் கந்தோரைச் சேர்ந்த திரு. இ. சிவசோதி ஆகிய மூவரும் நேற்று நடந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

.....

## அங்குரார்ப்பணம்

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் - கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் மாணவர் இந்து மாமன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

## நடேசபிள்ளைக்கு உசனில் நினைவுவிழா வெள்ளோட்டம்

மீசாலை, புதன்

''தூய்மையான சைவ வாழ்வு வாழ்ந்து சிவப்பேறு பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பின்பற்றி வாழ்ந்த ஆறுமுகநாவலரின் போதனைகளையும் வழிகாட்டலையும் ஏற்று அரசியல், சமய, சமூகத்தொண்டுசெய்தவர் சேர். பொன். இராமநாதன் ஆவர். சகல துறையிலும் அன்னாரின் வாரிசாக விளங்கிப் பெருந்தொண்டு சமூகத்துக்காற்றியவர் கலாநிதி சு. நடேசபிள்ளையாவர்''

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நடேசன் நினைவுவிழாவில் நடேசபிள்ளையின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்துவைத்த யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. சி. சரவணபவன் (சிறப்பி. தலைமையில் நடைபெற்றஇவ் விழாவில் திரு. முருகேசம்பிள்ளை மேலும் பேசுகையில் ''உலகத்தின் மிகப்பழைய சமயம் சைவசமயம் என்பதை உலகின்அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இன்று ஒப்புக்கொள்ளுகின்றனர். தொன்மை வாய்ந்த இந்தச் சமயத்திலே பிறந்ததற்காக நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படுவதுடன் நின்றுவிடாது உண்மைச் சைவர்களாக சைவ வாழ்க்கையை அநுட்டிக்க வேண்டும்'' என்றார்.

விழாவிற்குத் தலைமைதாங்கிய அதிபர்திரு. சரவணபவன் பேசும்போது ''தமது நாட்டிற்கும் மொழிக்கும். சமயத்திற்கும் நற்றொண்டாற்றிய பெரியோர்களின் வாழ்க்கையையும் சாதனைகளையும் நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவர்கள் நன்கு அறிந்துவைத்திருத்தல் வேண்டும்'' என்றார்.

யாழ்ப்பாணம் விழா

கோண்டாவில் கழக்கு அரசடிப் பிள்ளையார்கோவிலுக்கு லட்சரூபா செலவில் புதியசித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இதன் வெள்ளோட்ட விழா எதிர்வரும் திங்கட்கிழமை மாலை விமரிசையாக நடைபெறவிருக்கிறது. இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவமும் இத்தினத்தில் அரம்பமாகிறது. பத்துத் தினங்களுக்கு உற்சவம் தொடர்ந்து நடைபெறும் (அ)

## ஆயுர்வேத பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

வடஇலங்கை சுதேசவைத்திய சபையார் யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் சென்ற செப்டெம்பர் மாதம் ஆயுர்வேத திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இறுதி வருடப்பரீட்சையில் பின்வரும் மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

எம். சரோஜினிதேவி, கே. உலாதேவி, ஆர். தேவநாயகி, எஸ். நிமலாவதி, ஆர். தங்கேஸ்வரி, ரி. சித்திராதேவி, ஏ. அமிர்தநாதன், ஆர். பாக்கியநாதன், ரி. ரி. தியாகேஸ்வரன், கே. கந்தசாமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ கிருஷ்ணா**
[பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர்—லக்ஷ்மி
நடித்த
**ஜீவநம்சம்**

**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
எம்.ஜி.ஆர். -ஜெயலலிதா
**அன்னமிட்டகை**

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ராஜன்-வாணிஸ்ரீ
**இருளும் ஒளியும்**

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர். — பத்மினி
**மன்னாதி மன்னன்**
வி. வெ. மாலை 4 15
HORSE MAN

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m
The Fabulous Wild Life Treat
in Color!
The Sequel to "BORN FREE"
"ELSA" The Lioness Wave
"BORN FREE"
Now her Cubs are
**"LIVING FREE"**
(Color) with
Susan Hampshire, Nigel Davenport

**ஸ்ரீதர் சினிமா** (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா
தினசரி 4 காட்சிகள்
**தாயைக் காத்த தனயன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன்—புஸ்பலதா
காலை 10-30, 2-30 மாலை 6-30, இரவு 9-45 நடித்த
**கற்பூரம்** புதிய பிரதி

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் .... காஞ்சனா .... ரவிச்சந்திரன் நடித்த
**உத்தரவின்றி உள்ளே வா**

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சுந்தரராஜன்
நடித்த
**அன்புச் சகோதரர்கள்**
சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி
பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, சனி, ஞாயிறு
காலை 10-30

இது ஒரு வழக்கமான கதை அல்ல.
முற்றிலும் மாறுபட்ட கதை.

தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை

ஆறு குணங்கள் கொண்டவனாம் ஒரு பாவை
அது யாரோஎவரோ —அவள்தான்......

**ராமன் தேடிய சீதை**
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

கடைசி வாரம்
**லிடோ** (யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30,
மாலை 6-30, இரவு 9-30
முத்துராமன் - ஜெயலலிதா
**சூரியகாந்தி**


## கொலை முயற்சி வழக்கு ஒத்திவைப்பு

மீசாலை, புதன்

மாங்குளம் கொலை முயற்சி வழக்கு எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளின் கோரிக்கையின்படி இரு சாட்சிகள் சமுகமளிக்க முடியாமையைத் தொடர்ந்து ஜுலை முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாங்குளம் கே. நடராசா, ஈ. நித்தியானந்தம் ஆகிய இருவரையும் அவ்வூரைச் சேர்ந்த ஏ. இராமச்சந்திரன், வீ. சச்சிதானந்தம் ஆகிய இருவரும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு வவுனியா உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் திரு. ஓ. அம்பிகைபாகன், திரு. சிவா. ஸ்ரீதரன் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் வேண்டுதலின் பிரகாரம் நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

......

## பதநீர் உற்பத்தியில் தீவிரம்

உடுப்பிட்டி, புதன்

கட்டைவேலி - உடுப்பிட்டி கள்ளுற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் பதநீர் உற்பத்தியில்தீவிரமாக ஈடுபட்டுள்ளதோடு, சீவல் தொழிலாளர்களையும் பதநீர் இறக்குவதில் ஊக்கமளித்து வருகின்றது.

அதிக அளவில் பனங்கட்டி தயாரிப்பை மேற்கொள்ளும் முகமாக இலந்தைக்காடு பனங்கட்டித் தொழிற்சாலைக்குக்கட்டைவேலி - உடுப்பிட்டிக் கள்ளுற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தினமும் 100 கலன் பதநீரை விநியோகித்து வருகின்றது. (ஈ)


**அபிஷேகத் திரவியங்கள்**
**சந்தனக்குழம்பு**
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)

0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்


வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
0 "ராதா" பத்மினி ஐவ்வாது பத்தி
0 99 — 999 ஐவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்

விளைவு சூடம், சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாக கிடைக்கும்

**எஸ். சுப்பிரமணியம்**
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)
53, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825

**றியோ**
யாழ்.
நகர மண்டபம்

இப்பொழுது திரையிடப்படுகிறது
தினசரி காலை 10-30, பி. ப. 2-30
மாலை 6-30, இரவு 9-45.
ஜெய்சங்கர் (இருவேடங்களில்) வாணிஸ்ரீ
நாகேஷ் வி. கே. ராமசாமி நடித்த



சுபலக்ஷ்மி மூவிஸ் அளிக்கும்
குடும்பச் சித்திரம்

**அவசரக் கல்யாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அதிக வலிமையுடையவர்களும் அதிக செல்வமுடையவர்களும் நியாயத்தைச் சொன்னால் கேட்க மாட்டார்கள். — பீல்டிங்.

# ஈழநாடு

(13—6—74)

## வைத்தியம் தேவைப்படும் மருத்துவ சேவை

அரசாங்க வைத்திய அதிகாரிகள்சங்கம் தனது தீவிர நடவடிக்கைகளைத் தற்காலிகமாகக் கைவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. 'சட்டப்படி வேலை'; 'சட்டணம் பெறும் வார்ட்டுகளைப் பகிஷ்கரித்தல்' போன்ற நடவடிக்கைகளை இவர்கள் நிறுத்தியிருக்கின்றனர். இதன்விளைவாக சங்கப்பிரதிநிதிகள் பிரதமரை நேரில் சந்தித்து தமது அவசிய தேவைகளை எடுத்து விளக்க வாய்ப்புக் கிடைத்தது.

வைத்திய நிபுணர்கள் வெளியேற்றம் அரசாங்கத்துக்கு விசனம் அளித்திருந்தது. இந்த நிலைமையைத் திருத்த தகுந்த யோசனைகள்கூறிய அரசாங்க வைத்தியஅதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைகளைப் பிரதமர் தட்டிக்கழிக்க மாட்டாரென்பதுதிண்ணம்,

நாட்டைவிட்டு வெளியேறும் டாக்டர்களை அவசரப்பட்டு தடுத்து நிறுத்தவேண்டியதில்லையென்பதே அரசாங்கத்தின் இன்றைய முடிவு வைத்தியர்சங்கம் இந்த முடிவுக்கு ஆதரவளித்திருக்கிறது. அதேசமயம் நாட்டுப்பற்றுள்ள நல்ல திறமைசாலிகள் வெளியேறவேண்டிய காரணங்களை அரசாங்கம் கவனிக்கவேண்டிய அவசியத்தையும் சங்கம் ஆணித்தரமாக எடுத்து விளக்கியிருக்கிறது.

திறமைக்கு முதலிடம் கொடுப்பதே நல்லாட்சியின் சிறப்பிலக்கணம் என்றகருத்தை தலையங்கமாகக்கொண்டு ஆங்கில தினசரிப் பத்திரிகை ஒன்று காரசாரமான கட்டுரையைத் தீட்டியிருந்தது. அதை நன்றாக ரசித்த ஒரு டாக்டரின் மனைவி அதே பத்திரிகையில் எழுதிய கடிதம் அரசாங்கத்தின் கவனத்துக்குரியது.

'யார் வெளியேற விரும்பினாலும் நாம் பொருட்படுத்தமாட்டோம்; நாம் நினைத்தபடியே நடப்போம்' என்ற கொள்கையை அதிகார வர்க்கம் கடைப்பிடிக்குமானால் சேவைக்கு அணிகலமான சிறந்த டாக்டர்களை நாடு இழப்பது வியப்பாகாது.

அதிகார வர்க்கத்திற்கு அடிபணியும் பேர்வழிகளும் அரசியல் ஆதரவு பெற்ற திறமையற்ற வைத்திய அதிகாரிகளும் சேவையின் உயர்மட்டங்களைப் பிடிக்க முடியுமானால் திறமைசாலிகள் ஒதுக்கற்றவர்களாகக் காணப்படும் நிலை உருவாகும்.


நல்லகாலம் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீவிரவாதத்தைக் கைவிட்டு சமத்துவப் பாதையில் அரசாங்கத்திற்கு ஆக்க யோசனைகள் கூறும் பணியில்இறங்கியுள்ளது.

பெருக்கெடுத்துப்பாயும் ஆறுபோல் நாட்டில் சமுதாய மாற்றங்கள் நிகழ்வதை நாம் பார்க்கமுடிகிறது. இன்றைய சமுதாய அமைப்பில் மகத்துவம் மிக்கவைத்திய சேவையில் ஈடுபடும் டாக்டர்கள் தம்மை தனிப்பட்ட ஒரு சமூகமாகக் கருதுவதுநாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக அமையும்.

இன்று நாடு அனுபவிக்கும் கஷ்டநஷ்டங்களில் பங்குகொள்ளவும் தம்மாலியன்ற தியாகத்தை நாட்டிற்கு அர்ப்பணிக்கவும் சித்தமுள்ளவர்களே வைத்தியசேவையின் உயர்ச்சிக்கு உதவியளிக்கவல்லவராவர்.

நாட்டின் மருத்துவ சேவையின் குறைகளைக் களையவும், சேவைக்கு அவசியமான டாக்டர்களின் சம்பளம், சேவைநியந்தனைகள் போன்ற விஷயங்களில் நல்லதீர்வுகாணவும் பிரதமரின் தனித்துவ திறமையும்சமத்துவபுத்தியும் உதவுமென்பதே எமது நம்பிக்கை.

நோயாளிக்கு வருத்தம் குணமடைய பொறுமையும் விசுவாசமும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் டாக்டர்களுக்கு இப்பண்புகளாகைகயால் நிலைமை திருந்துமென நம்பஇடமுண்டு.




இறைவனெம் முடனே யென்றும்
இருக்கிறு னென்று எண்ணி
அறமுடன் வேலை செய்யின்
அருள்பெற வுரிய ராவர்;
பிறவொரு அதிகா ரிக்குப்
பேதையாய்ப் பயந்து வேலை
திறமுடன் புரிந்திட் டாலுந்
திருவருள் கிட்டா தம்மா

"கடவுள் எம்முடன் எந்நேரமும் இருக்கின்றார்," என எண்ணித் தரும சிந்தனையுடன் அலுவல்களைச் செய்யின், அருள் கிடைக்கும். மேலதிகாரிக்குப் பயந்து செய்யும் அலுவல்கள் திறமையுடையதாயினும், அருள் கிட்டாது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு [illegible] மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box No. 49, Jaffna. Telegrams "Eelanaadu" Telephone: 389.

# காட்டு வழி கதிர்காமம்

வி. என். பி.

### வற்றாப்பளை

கண்ணகை அம்மாளின் பொங்கல்விழா ஜூன் மாதம் மூன்றும் திகதி இரவு வழக்கமான கோலாகலங்களுடன் இனிது நிறைவேறியது. இம்முறை வைகாசி விசாகத்துடன் பௌர்ணமியும் கூடிய திங்கட்கிழமை பொங்கல் தினம் வந்தது ஒரு விசேஷ முகூர்த்தம்.

சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கோவில் ஒழுங்குமுறைகள் சிறப்பாயிருந்தன. கோவிலுக்கு அருகிலேயே பெரிய விசாலமான கிணறு கட்டி முடிக்கப்பட்டு தண்ணீர் வசதிக்குச் சிறிதும் தட்டுப்பாடு உண்டாகவில்லை கோவிலுக்கு வெகு தூரத்திலேயே கடைகள் அனுமதிக்கப்பட்டன ஒருபுறம் வரிசையாக சுமார் நூறு கடலைக் கடைகள், மறுபுறம் வரிசையாக நூறு சாப்பாடு, தேனீர், சிற்றுண்டிக்கடைகள், இன்னொருபுறம் வரிசையாக நூறுவளையல், புடவை பாத்திரக்கள், தட்டுமுட்டு சாமான் கடைகள் என்று ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தது.

இருந்தும் போன வருடத்திலும் பார்க்க இம்முறை சனம் குறைவு. உணவுப் பொருள், எரிபொருள் தட்டுப்பாடுதான் காரணமென்று சொல்லத் தேவையில்லை. கோயிலடியில் ஒருசோற்றுப் பொட்டலம் இரண்டு ரூபாய், ஒரு தோசை இருபத்தைந்து சதம், ஒரு பிளேயின் டீ நாற்பது சதம். (முல்லைத்தீவுக் குறிச்சியில் நாலு நிறைசுண்டு அரிசி மூன்றரை ரூபாய் விற்கிறது.

திங்கட்கிழமை பொழுதுபட்டவுடனேயே பொங்கற்பானைகள் அடுப்பேறத் தொடங்கி விட்டன. விடியும் வரை பொங்கல் நடந்தது. கோயில் பரிபாலகர்கள் வளந்து (நாயகக் கொழுந்து) வைத்தபின்பு அதாவது அவர்கள் அடுப்பில்பொங்கற்பானை வைத்து பின்புதான் பிற அடியார்கள் பொங்கவேண்டும் என்பதே பழைய சம்பிரதாயம். இங்கே ஒவ்வொருவரும் நேரத்தோடு பொங்கிக்கொண்டு தத்தம் வளர்கள் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் வளந்துவைக்கமுன்பே பொங்கிவிடுவார்கள். பொங்கியதை அப்படியே அடுப்புக்குப் பக்கத்தில் பழம் பாக்கு வெற்றிலையுடன் வைத்துப் படைத்து கற்பூரம் கொளுத்திவிட்டு, இயலாதை ஏழைகளுக்கும் அடியார்களுக்கும் ஈந்துவிட்டு மீதியைத் தூக்கிக் கொண்டுபோவார்கள். இக்காரணத்துக்காக அன்றிரவு பதினொரு மணிக்கே நெடுந்தூர பஸ்வண்டிகள் புறப்படத் தொடங்கிவிட்டன.

செவ்வாய்க்கிழமை (4ம் திகதி) பொழுது புலர்ந்ததும் வருடத்தில் ஓரிரவு மட்டும் அழகாபுரியாக மாறும் வற்றாப்பளை வெறிச்சோடி விட்டது. பிந்தி வந்த அடியார்கள் அவசர அவசரமாகப் பொங்கிக் கொண்டு ஓடினார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகள் மூடப்பட்டன. ட்ராக்டர்களும் லொறிகளும் வான்களும் சீறி இரைந்துகொண்டு பறந்தன.

கதிர்காமத்துக்கு பாதயாத்திரை செய்யப்போகிறவர்கள் — சுமார் நூறு பேர்-மட்டும் மூட்டை முடிச்சுகளுடன் கோயில் வாசலில் இரண்டு நிரையில் நின்றார்கள். சிலர் ஆடினர், சிலர் பாடினர், சிலர் ஆவேசங் கொண்டனர். முருகா, கந்தா, சண்முகா, வேலா, பாலா, அரோஹரா என்ற கோஷங்கள் தொடங்கின.

கோயில் பூசாரியும் அர்ச்சகரும் ஏதேதோ சடங்குகள் செய்து, யாத்திரீகர்களை ஆசீர்வதித்த பின்பு, அரோஹரா கோஷம் வானைப் பிளக்க, அடியார் கூட்டம் உடைமைகளைச் சுமந்து கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

ஏழு மாதக் குழந்தைமுதல் எழுபது வயதுக் கிழவர்கள், கிழவிகள், சிறுவர், சிறுமிகள், குருடர், செவிடர், நொண்டிகள், கர்ப்பிணிகள் கூட எறும்புகள் போலக் கொடி விட்டு, வயல்களுக்கூடாக விறுவிறென்று நடந்தனர்.

கதிர்காமப் பாதயாத்திரை ஆரம்பித்துவிட்டது.

(தொடரும்)

## போட்டிகள்

பருத்தித்துறை, புதன் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் வருடாந்த பேச்சு, கட்டுரை இசைப்போட்டிகள் கடந்த ஞாயிறு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. போட்டிகளின் தரம் பலரால் பாராட்டப்பட்டது.

## தொழிற்——

(1ம் பக்க தொடர்ச்சி)

கலந்தாலோசித்துப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் கல்வி அமைச்சு தீவிர கவனம் செலுத்திவருவது குறிப்பிடத்தக்கது. வடபகுதி ஆசிரியர் பலர் ஏதாவது ஒரு ஆசிரிய தொழிற் சங்கத்தில் சேராமல் இருப்பது நியாயமாகாது. அரசாங்கமும் பதவி உயர்வுகள் வழங்கும்போது தொழிற் சங்கங்களின் சிபார்சுகளைக் கவனத்திலெடுத்தால் அதிகமான ஆசிரியர்களின் குறைபாடுகளும், மனவிரக்திகளும் நீங்க வழி பிறக்கும்."

இவ்வாறு இலங்கை ஆசிரிய சங்க உடுவில் கிளை வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய தலைவர் திரு ஆ. கல்யாணசுந்தரேசன் குறிப்பிட்டார். மானிப்பாய் மெமோரியல் மகாவித் [illegible]

(அ)

# ஐயனார் எழுதுவது

விந்தியோதயா பல்கலைக் கழக வளாகத்திலே மாணவர்களின் கிளர்ச்சியைப்பற்றி அதன் தலைவர் டாக்டர் சந்திரா தர்மவர்த்தன மனமுடைந்து பேசியிருக்கின்றார். அங்கு "ராக்கிங்" என்றபயரால் இரு விரிவுரையாளர்கள் மாணவர்களால் தாக்கப்பட்டனர். பல புதியமாணவர்கள் பலவிதங்களில் இம்சை செய்யப்பட்டுள்ளனர். இதனால் வளாகத்தை ஒரு வாரத்துக்கு மூடவேண்டியதாயிற்று

"பிள்ளைகளுக்கு நம்நாடு அறிவுள்ள கல்வியை அளிக்க முடியாவிடின் இன்றைய நிலையிலுள்ள ஸ்ரீலங்கா பல்கலைக் கழகத்தை மூடவேண்டியதே" என்கிறார், மாணவர்களில் பெரும்பாலோர் எதையும்படிக்கவேண்டுமென்பதில் ஆர்வம் கொள்ளவில்லை என்றும், "தத்துவத்தை" அறிவதாகக்கூறி பால் உணர்ச்சியுடன் மிகக்கீழ்த்தரமாக "ராக்கிங்"கில் ஈடுபட்டுள்ளதாகவும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் 'கலாட்டா' செய்வதாகவும், மாணவர்களுக்கு கல்விக்காக மாதத்துக்கு ரூ 150 வீதம் அளிக்கப்படும் கடன் உதவியை மாணவர்களில் பலரும் புத்தகம் வாங்குவதற்குப் பதில், விலைமதிப்புள்ள ஷேர்ட்டுகளையும், அழகு சாதனங்களையும் வாங்கி வைத்திருப்பதாகவும் இன்னும் பலபல குறைகளைச் சொல்லுகின்றார். "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் இதுபற்றிய கட்டுரையைப் படிக்கையில் மிகவேதனையாகஇருந்தது.

யாழ்ப்பாணத்திலே ஆரம்பிக்கப்படவிருக்கும் பல்கலைக் கழக புதிய வளாகம் இந்த கலாட்டாவழியைப் பின்பற்றாமல், மற்ற வளாகங்களுக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும். இன்றேல் அங்கு வளாகம் ஆரம்பிப்பது அம்மாணவர்களுக்கு நன்மையைவிட தீமையேஅதிகம்செய்யக் கூடும். காலம் போகிற போக்கிலே, பல்கலைக்கழக வளாகங்களை நல்ல முறையில் நடத்த முடியுமா என்பது மிக முக்கியமான கேள்வி. நாட்டின் நன்மையில் அக்கறையுள்ள கல்வியாளர்களும், அறிஞர்களும் இம்முக்கிய விஷயத்தில் கவனம்செலுத்தி, தக்கமாற்றங்களைச் செய்தாலே நாட்டின் எதிர்காலம் மேலாக இருக்கமுடியும். எதிர்காலத் தலைவர்களான பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்கத்தை பாதுகாக்கவும், பயனுள்ள முறையில் அவர்களது வாழ்க்கை அமையவும், இக்கல்வி முறையைத் திருத்திஅமைக்க வேண்டும். இது சுலபமான

(4ம் கலம் பார்க்க)

[5ம் கலத் தொடர்ச்சி]

வேலையல்ல. என்றாலும் மிக முக்கியமான அவசியமான காரியமாகும்.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு கதிரேசு

பருத்தித்துறை சிறைச்சாலை பொறுப்பதிகாரி கதிரவேலு கதிரேசு அவர்கள் 12-6-74 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் நீர்வேலி கதிரவேலு-பொன்னுச்சிப்பிள்ளையின் மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும், குமரேசன் (பேராதனை பல்கலைக்கழகம்), உமாராணி (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), சிவநேசன் (யாழ். இந்துக் கல்லூரி) மற்றும் கலாராணி ஆகியோரின் தகப்பனாரும், சரவணமுத்து (நெடுஞ்சாலைப் பகுதி இன்ஸ்பெக்டர் பருத்தித்துறை), திருமதி தம்பிப்பிள்ளை, திருமதி மாணிக்கம் ஆகியோரின் சகோதரரும், மாணிக்கம் தம்பிப்பிள்ளை (மலேசியா), மாணிக்கம்பிள்ளை நடராசா (சிங்கப்பூர்), பொன்னம்பலம் (யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்) நீலாயதாட்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 13-6-74 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில், 11, சினியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணையிலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும். 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org